# எசெக்ஸ் தமிழ்க் கழகக் கீதம்

எண்ணம் உயர்த்திடும் எசெக்ஸ் தமிழ்க் கழகம்
என்றென்றும் வாழியவே
எம்முயிராம் தமிழ் வசப்படும் கல்வியைத்
தந்தென்றும் வாழியவே

பண்ணொடு பாடலும் ஆடலும் நாங்கள்
பயின்றிடவோர் களமாய்ப் - பெரும்
பண்பையும் கலையையும் அன்பையும் நம்முட்
பாய்ச்சியே வாழியவே

விண்ணொடு மண்ணையும் வியத்தகு பூத
விந்தை தெரிந்திடவும்
தன்னலம் நீங்கிய தானமும் ஞானமும்
சிந்தை புரிந்திடவும்
முன்னவர் கூறிய முதுமொழி நெஞ்சிற்
போற்றி மதித்திடவும்
அன்னையர் தந்தையர் ஆசறு நல்லோர்
பாதம் பணிந்திடவும்

(எண்ணம் உயர்த்திடும்)

தன்னிகரில்லாத் தாயகத் தேவியின்
தாகம் உணர்த்திடவும்
தொன்மைகொள் நம்மினம் தோன்றிய பாதையின்
மேன்மை புரிந்திடவும்
மன்னுயிரோம்பி மேதினி மாந்தரின்
சோகம் துடைத்திடவும்
அன்னமளித்திந்த அவனியிலுள்ளோர்
உறுபசி தீர்த்திடவும்.

(எண்ணம் உயர்த்திடும்)

*ஆக்கியோன் - புலவர் சிவநாதன்*